# குழித்துறை நகராட்சி

**குழித்துறை நகர்மன்றத்தின் சாதாரணக்கூட்டம் 24-10-2024 வியாழக்கிழமை மாலை 3.00 மணிக்கு நடைபெற்ற கூட்டத்தில் நிறைவேற்றப்பட்ட தீர்மானங்கள்**

## நகர் மன்ற தலைவர் திரு.பொன். ஆசைத்தம்பி அவர்கள் கொண்டு வரும் தீர்மானம்

1) 22-12-2023 நாள் நகர்மன்ற தீர்மானம் நகராட்சி எல்கை விரிவுபடுத்திட நல்லூர், உண்ணாமலைக்கடை, பாகோடு, களியக்காவிளை போன்ற பஞ்சாயத்துக்களை நகராட்சியில் இணைக்க தீர்மானம் நிறைவேற்றப்பட்டுள்ளது. மேற்படி கொல்லஞ்சி, நட்டாலம், விளவங்கோடு போன்ற ஊராட்சிகளையும் குழித்துறை நகராட்சியுடன் இணைக்க தமிழக அரசை கேட்டு மன்றம் தீர்மானிக்கலாம்.

   மன்றத்தீர்மான எண்.1013 நிராகரிக்கப்பட்டது.

## 4-வது வார்டு நகர்மன்ற உறுப்பினர் திருமதி.செ. லலிதா கொண்டு வரும் தீர்மானங்கள்

1) நகராட்சிக்கு சொந்தமான கல்வெட்டான் பறம்பு என்ற இடத்தில் ஒரு சிறுவர் பூங்கா அமைக்க மன்றம் தீர்மானிக்கலாம்.

   மன்றத்தீர்மான எண்.1014 (1) தீர்மானிக்கப்பட்டது.

2) பிளஸ்சிங் நகர் முதல் கோணத்துவிளை வரை உள்ள பாதையை காங்கிரிட் தளம் (Or) பேவர் பிளாக் அமைக்க மன்றம் தீர்மானிக்கலாம்.

   மன்றத்தீர்மான எண்.1014 (2) தீர்மானிக்கப்பட்டது.

3) இடைவிளாகம் பெரும்பள்ளிவிளை முதல் குந்நன்விளை வரை உள்ள காங்கிரீட் ரோடு சீரமைக்க மன்றம் தீர்மானிக்கலாம்.

   மன்றத்தீர்மான எண்.1014 (3) தீர்மானிக்கப்பட்டது.

4) கல்வெட்டான்குழி பேவர் பிளாக் ரோடு சீரமைக்க மன்றம் தீர்மானிக்கலாம்.

   மன்றத்தீர்மான எண்.1014 (4) தீர்மானிக்கப்பட்டது.

5) கோணத்துவிளை திரு. நோபிள் வீட்டுபக்கம் உள்ள மின்கம்பத்தில் மின் விளக்கு அமைக்க மன்றம் தீர்மானிக்கலாம்.
   மன்றத்தீர்மான எண்.1014 (5) தீர்மானிக்கப்பட்டது.

<u>7-வது வார்டு நகர்மன்ற உறுப்பினர் திருமதி.U.R. விஜயலெஷ்மி கொண்டு வரும் தீர்மானம்</u>

1) நரியன்விளை சர்ச் பக்கத்திலிருந்து வெட்டுக்காட்டுவிளை செல்லும் புறம்போக்கு பாதையை காங்கிரீட் சாலையாக மாற்றியமைக்க மன்றம் தீர்மானிக்கலாம்.

மன்றத்தீர்மான எண்.1015 (1) தீர்மானிக்கப்பட்டது.

<u>9-வது வார்டு நகர்மன்ற உறுப்பினர் திரு.எம்.பி. ரவி கொண்டு வரும் தீர்மானங்கள்</u>

1) விளவங்கோடு அரசு மேல்நிலைப்பள்ளி நுழைவு வாயில் அருகாமையிலிருந்து J.J.மால் முன்பக்கம் தேசிய நெடுஞ்சாலை ஒரம் வழியாக மழைநீர் வடிகால் அண்ணாசிலை எதிர்புறம் செல்லும் கல்வெர்ட் வரை ஒடை அமைக்க மன்றம் தீர்மானிக்கலாம்.

மன்றத்தீர்மான எண்.1016 (1) தீர்மானிக்கப்பட்டது.

2) தேசிய நெடுஞ்சாலை குறுக்கே செல்லும் மழைநீர் வடிகால் சந்திப்பிலிருந்து திருவனந்தபுரம் செல்லும் சாலையில் Josco பனிச்சர் அருகாமையில் தேசிய நெடுஞ்சாலை குறுக்கே செல்லும் கல்வெர்ட் வரை ஒடை அமைக்க மன்றம் தீர்மானிக்கலாம்.

மன்றத்தீர்மான எண்.1016 (2) தீர்மானிக்கப்பட்டது.

3) விளவங்கோடு சாலையிலிருந்து பிரிந்து மேலே சாணிவிளை செல்லும் சாலையில் திரு. கண்ணன் அவர்கள் வீடு அருகாமை முதல் திருமதி. ஜெகதீஸ்வரி வீடு அருகாமை வரை சாலை செப்பனிட மன்றம் தீர்மானிக்கலாம்.

மன்றத்தீர்மான எண்.1016 (3) தீர்மானிக்கப்பட்டது.

<u>16-வது வார்டு நகர்மன்ற உறுப்பினர் திரு.கு. இரத்தினமணி கொண்டு வரும் தீர்மானங்கள்</u>

1) கொல்லக்குளம் கோடியாவிளை சாலையில் உள்ள திரு. ஜெகன் மற்றும் ரெத்தினசாமி அவர்கள் வீட்டின் அருகில் உள்ள மின்கம்பத்தில் மின் விளக்கு அமைக்க மன்றம் தீர்மானிக்கலாம்.

மன்றத்தீர்மான எண்.1017 (1) தீர்மானிக்கப்பட்டது.

2) கீழ்பம்மம் கிழக்கே புத்தன் விளை திரு. ராஜகோபால், திரு. அம்புறோஸ், திரு. அய்யப்பன், திரு. சத்திய நேசன், திரு. சஜீ, திரு. நாகேந்திரன் ஆகிய ஆறு நபர்களின் வீட்டின் அருகில் உள்ள மின்கம்பங்களில் மின்விளக்கு அமைக்க மன்றம் தீர்மானிக்கலாம்.

மன்றத்தீர்மான எண்.1017 (2) தீர்மானிக்கப்பட்டது.

3) கோடியவிளை திரு. ராஜேஸ் அவர்கள் வீட்டின் அருகில் மின்கம்பம் அமைத்து மின் விளக்கு அமைக்க மன்றம் தீர்மானிக்கலாம்.

மன்றத்தீர்மான எண்.1017 (3) தீர்மானிக்கப்பட்டது.

<u>21-வது வார்டு நகர்மன்ற உறுப்பினர் திருமதி.கே. செல்வகுமாரி கொண்டு வரும் தீர்மானங்கள்</u>

1) குலசேகரம் ரோடு திருப்பு சந்திப்பில் உள்ள வடிகால் பழுதடைந்து மழை காலங்களில் சாலையில் கழிவுநீர் வழிந்து செல்வதை தடுக்க வடிகால் பக்க சுவர் உயர்த்தி சரி செய்ய மன்றம் தீர்மானிக்கலாம்.

மன்றத்தீர்மான எண்.1018 (1) தீர்மானிக்கப்பட்டது.

2) சிறியகாட்டுவிளை ராஜீ அவர்களின் வீட்டின் அருகில் உள்ள மின்கம்பத்தில் மின் விளக்கு அமைக்க மன்றம் தீர்மானிக்கலாம்.

மன்றத்தீர்மான எண்.1018 (2) தீர்மானிக்கப்பட்டது.

3) குலசேகரம் ரோட்டில் சுந்தரமணி அவர்கள் வீட்டின் அருகில் உள்ள இரண்டு மின்கம்பங்களில் மின்விளக்கு அமைக்க மன்றம் தீர்மானிக்கலாம்.

மன்றத்தீர்மான எண்.1018 (3) தீர்மானிக்கப்பட்டது.

4) நாவுரிகாட்டுவிளை SETC டிப்போ அருகில் உள்ள வழிப்பாதையில் உள்ள சாய்வுதள படிகட்டுகளை மாற்றி பொதுமக்கள் வசதிக்கு சாய்வு தளம் அமைக்க மன்றம் தீர்மானிக்கலாம்.

மன்றத்தீர்மான எண்.1018 (1) தீர்மானிக்கப்பட்டது.

<u>பொருள் எண்.1.</u>

முதலமைச்சர் காலை உணவு திட்டத்தின்கீழ் இந்நகராட்சிக்குட்பட்ட 1 முதல் 5-ம் வகுப்பு வரை பயிலும் மாணவ மாணவியர்களுக்கு காலை உணவு வழங்கும் திட்டத்தில் பயன்படுத்தப்படும் சமையலறையினை ஆய்வு செய்து ISO தர சான்றிதழ் பெற்றிட Quest Certification (P) Ltd. என்ற நிறுவனத்தின் மூலம் தர ஆய்வு மேற்கொள்ளவும், ISO தர சான்றிதழ் பெற்றிடவும் உத்தேச மதிப்பீடாக ரூ.18,000/- வரப்பெற்றுள்ளது. எனவே மேற்படி நிறுவனத்தின் மூலம் தரசான்றிதழ் பெற்றிட ஏற்படும செலவின தொகையினை நகராட்சி பொதுநிதியின்கீழ் வழங்கிட மன்றத்தின் அனுமதிக்கு.

அ.கு.:- மன்றம் அனுமதிக்கலாம்.
ந.க.எண்.1967/2022/இ1.

மன்றத்தீர்மான எண்.1019 அனுமதிக்கப்பட்டது.

<u>பொருள் எண்.2</u>

குழித்துறை நகராட்சி 15-வது நிதிக்குழு மானியம் 2023-2024 Tied Grand திட்டத்தின்கீழ் ரூ.58.10 இலட்சத்திற்கு குழித்துறை நகராட்சிக்குட்பட்ட கீழ்பம்மம் உரக்கிடங்கில் திடக்கழிவுகளில் உள்ள உலர்கழிவுகளை சேகரிக்கும் கட்டிடம் அமைக்கும் பணிக்கு நகராட்சி நிர்வாக இயக்குநர், சென்னை அவர்களின் கடித ந.க.எண்.16496/2023/.EA-2, நாள் 20-08-2024-ன்படி பணி மேற்கொள்ள அனுமதி வழங்கப்பட்டுள்ளது. நகராட்சி நிர்வாக மண்டல இயக்குநர் அவர்களின் செயல்முறை ஆணை கடித ந.க.எண்.15156/2024/ஆ1, நாள் 23-08-2024-ன்படி நிர்வாக அனுமதி வழங்கப்பட்டு மேற்படி பணிக்கு 19-09-2024 அன்று ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டதில் விவரம் கீழ்வருமாறு.

| வ. எண். | பெயர் | விழுக்காடு |
|---|---|---|
| 1 | திரு.P. ஜெயசந்திரன் | மதிப்பீட்டு விலை விகிதம் |
| 2 | திரு. ஜாண்சன் | 0.33% மதிப்பீட்டை விட அதிகம் |

மேற்கண்டவாறு வரப்பெறப்பட்ட இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளின் ஒப்புநோக்கு பட்டியல் தயாரிக்கப்பட்டதில் குறைந்த ஒப்பந்தப்புள்ளியாக மதிப்பீட்டு விலைவிகிதத்தில் கொடுத்துள்ள ஒப்பந்ததாரர் திரு.P. ஜெயசந்திரன் அவர்களின் ஒப்பந்தப்புள்ளியினை ஏற்பது குறித்து மன்றத்தின் அனுமதிக்கு.

அ.கு.:- மன்றம் அனுமதிக்கலாம்.
ந.க.எண்.1016/2024/இ1.

மன்றத்தீர்மான எண்.1020 அனுமதிக்கப்பட்டது.

<u>பொருள் எண்.3</u>

குழித்துறை நகராட்சி வார்டு எண்.3 கல்பாலத்தடி இசக்கியம்மன் கோவில் முதல் படப்பறை-2 (Unicode 149003R006) சாலையின் ஒருபக்கம் பொதுபணித்துறைக்கு சொந்தமான கால்வாய் செல்கிறது. கால்வாய் அமைந்துள்ள பக்கத்தில் சாலையின் உயரம் தாழ்வாக உள்ளதால் அச்சாலையில் செல்லும் பொதுமக்கள் மற்றும் போக்குவரத்து பாதுகாப்பின்றி உள்ளது. எனவே மேற்கண்ட இடத்தில் பொதுமக்கள் மற்றும் போக்குவரத்து பாதுகாப்பு கருதி தடுப்பு சுவர் அமைக்க உத்தேச மதிப்பீடு ரூ.3,30,000/- (ரூபாய் மூன்று இலட்சத்து முப்பதாயிரம்) தயாரிக்கப்பட்டுள்ளது. தயார் செய்யப்பட்ட மதிப்பீட்டிற்கு மன்றத்தின் அனுமதிக்கு.

அ.கு.:- பணியின் அவசர அவசியம் கருதி நகர்மன்ற தலைவர் அவர்களின் முன் அனுமதி பெற்று ஒப்பந்தப்புள்ளி கோரியதை மன்றம் அனுமதிக்கலாம்.
ந.க.எண்.1753/2024/இ1.

மன்றத்தீர்மான எண்.1021 அனுமதிக்கப்பட்டது.

<u>பொருள் எண்.4</u>

குழித்துறை நகராட்சி - நகராட்சி நிர்வாக மண்டல இயக்குநர், திருநெல்வேலி அவர்களின் ஆய்வு கூட்டம் 29-05-2024 அன்று நடைபெற்ற கூட்டத்தில் மஞ்சள் பை வினியோகம் செய்வதற்கு அறிவுறுத்தப்பட்டுள்ளது. மேலும் நகராட்சி நிர்வாக மண்டல இயக்குநர் அவர்களின் அறிவுரையின்படி பொது இடங்களில் பயன்பாட்டிற்கும் மற்றும் பொதுமக்களின் பயன்பாட்டிற்கு வினியோகம் செய்வதற்கு மஞ்சள் பை 2000 அச்சிட்டு வாங்கி வழங்கிடவும் மேற்படி பணியினை CSR நிதியின்கீழ் மேற்கொள்ள மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

அ.கு.:- மன்றத்தின் பார்வைக்கும் முடிவிற்கும்.
ந.க.எண்.2051/2023/எச்1.

மன்றத்தீர்மான எண்.1022 அனுமதிக்கப்பட்டது.

<u>பொருள் எண்.5</u>

பொது சுகாதாரம்- இந்நகராட்சிக்குட்பட்ட வார்டுகளில் குப்பைகளை எடுக்க கூடிய புஸ்கட் தள்ளுவண்டியின் 2 வீல்கள் பழுதாகியுள்ளதால் அதனை சரி செய்ய செலவுத்தொகை ரூ.1700/- திரு. ராதாகிருஷ்ணன், துப்புரவு பணி மேற்பார்வையாளர் என்பவரால் மேற்கொள்ளப்பட்டது. ஆகையால் மேற்படி தொகையினை துப்புரவு பணி மேற்பார்வையாளர் திரு. ராதாகிருஷ்ணன் என்பவருக்கு வழங்கிட மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

அ.கு.:- அத்தியாவசிய பணிகளுக்கு செலவு மேற்கொண்டுள்ளதால் செலவின தொகை வழங்கலாம்.
ந.க.எண்.3256/2022/எச்1.

மன்றத்தீர்மான எண்.1023 அனுமதிக்கப்பட்டது.

<u>பொருள் எண்.6</u>

குழித்துறை நகராட்சியில் பணிபுரியும் தூய்மை பணியாளர்கள், துப்புரவு பணி மேற்பார்வையாளர், வாகன ஓட்டுநர்கள், அலுவலக உதவியாளர், மகப்பேறு மாது உதவியாளர், மின்கம்பி உதவியாளர் ஆகியவர்களுக்கு 2024-2025-ம் ஆண்டிற்கான சீருடைகள் மற்றும் காலணிகள் வாங்கி வழங்கிட செலவினத்திற்கு நகராட்சி பொது நிதியிலிருந்து செலவிடவும் மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

அ.கு.:- மன்றம் பார்வைக்கு முடிவிற்கும்.
ந.க.எண்.2346/2015/எச்1.

மன்றத்தீர்மான எண்.1024 அனுமதிக்கப்பட்டது.

<u>பொருள் எண்.7</u>

குழித்துறை நகராட்சியில் 78-வது சுதந்திரதின விழா முன்னிட்டு கலை நிகழ்ச்சிகள் மற்றும் விளையாட்டு போட்டிகள் நடத்தப்பட்டமைக்கு அதற்கு தேவையான மேடை, ஒலிபெருக்கி, காலை சிற்றுண்டி பணியாளர்களின் பணிபுரியும் தூய்மை பணியாளர்கள், துப்புரவு பணி மேற்பார்வையாளர், வாகன ஓட்டுநர்கள், அலுவலக உதவியாளர், மகப்பேறு மாது உதவியாளர் தன் நடத்தைக்கான சான்று மற்றும் கேடயம் ஆகியவை அனைத்தும் வருவாய் ஆய்வாளர் திரு. செந்தில் குமார் மற்றும் சுகாதார ஆய்வாளர் திரு. ராஜேஷ் என இருவரும் சேர்த்து செலவினம் செய்யப்பட்டது. பின் தொகை கீழ்கண்டவாறு,

1) வருவாய் உதவியாளர், திரு. செந்தில்குமார் - 24,311/-
2) சுகாதார ஆய்வாளர், திரு. ராஜேஷ் - 4,710/-

எனவே மேற்படி தொகையினை வருவாய் ஆய்வாளர் மற்றும் சுகாதார ஆய்வாளர் ஆகிய இருவருக்கும் நகராட்சி பொது நிதியில் இருந்து வழங்கிட மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.
அ.கு.:- மன்றம் அனுமதி வழங்கலாம்,.
ந.க.எண்.3256/2022/எச்1.

மன்றத்தீர்மான எண்.1025 அனுமதிக்கப்பட்டது.

<u>பொருள் எண்.8</u>

பொது சுகாதாரம்- இந்நகராட்சியில் சுகாதார பிரிவில் பயன்பாட்டிற்கான பிறப்பு சான்றிதழில் திருத்தங்கள் தொடர்பாக Flex Banner மற்றும் தூய்மை இந்தியா திட்டத்தின்கீழ் தூய்மை இந்தியா சேவை சம்பந்தமாக Flex Banner சிறிய அளவு -1-ம் பெரிய அளவு 1-ம், அலுவலக பயன்பாட்டிற்கு பொருட்கள் வாங்கிய வகைக்கும் இவை அனைத்தும் ரூ.5,180/- பில் தொகையினை துப்புரவு பணி மேற்பார்வையாளர் திரு.ராதாகிருஷ்ணன், என்பவரால் வழங்கப்பட்டுள்ளது. மேற்படி தொகையினை துப்புரவு பணி மேற்பார்வையாளர் அவர்களுக்கு வழங்கிட மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

அ.கு.:- மன்றத்தின் பார்வைக்கும் முடிவிற்கும்.
ந.க.எண்.3256/2022/எச்1.

மன்றத்தீர்மான எண்.1026 அனுமதிக்கப்பட்டது.

<u>பொருள் எண்.9</u>

குழித்துறை நகராட்சிக்குட்பட்ட வார்டு எண்.4-ல் இடைவிளாகம் பகுதியில் உள்ள குடியிருப்புகளுக்கு குடிநீர் வசதி செய்திட பகிர்மான குழாய் அமைக்க ரூ.65,000/-க்கு மன்றத் தீர்மான எண்.977, நாள் 29-08-2024-ன்படி மன்ற ஒப்புதல் பெறப்பட்டு 27-09-2024 அன்று ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டத்தின் விவரம் கீழ்வருமாறு.

| வ. எண். | பெயர் | விழுக்காடு |
|---|---|---|
| 1 | திரு.D. ஜஸ்டின்குமார் | 0.46% மதிப்பீட்டை விட அதிகம் |
| 2 | திரு.C. சுரேஷ் | 0.05% மதிப்பீட்டை விட குறைவு |

மேற்கண்டவாறு வரப்பெறப்பட்ட இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளின் ஒப்புநோக்கு பட்டியல் தயாரிக்கப்பட்டதில் குறைந்த ஒப்பந்தப்புள்ளியாக மதிப்பீட்டை விட 0.05% குறைவாக கொடுத்துள்ள ஒப்பந்ததாரர் திரு.C. சுரேஷ் அவர்களின் ஒப்பந்தப்புள்ளியினை ஏற்பது குறித்து மன்றத்தின் அனுமதிக்கு.

அ.கு.:- மன்றம் அனுமதிக்கலாம்.
ந.க.எண்.1772/2024/இ1.

மன்றத்தீர்மான எண்.1027 அனுமதிக்கப்பட்டது.

<u>பொருள் எண்.10</u>

குழித்துறை நகராட்சி வார்டு எண்.3-ல் கல்பாலத்தடி இசக்கியம்மன் கோவில் முதல் படப்பறை-2 (Unicode 149003R006) சாலையின் ஒருபக்கம் தடுப்புசுவர் அமைக்கும் பணிக்கு ரூ.3.30 இலட்சத்திற்கு நகர்மன்ற தலைவர் அவர்களின் முன் அனுமதி நாள் 10-09-2024-ன்படி முன் அனுமதி பெற்று

ஒப்பந்தப்புள்ளி 04-10-2024 அன்று ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டத்தின் விவரம் கீழ்வருமாறு.

| வ. எண். | பெயர் | விழுக்காடு |
|---|---|---|
| 1 | திரு.P. ஜெயசிங் | 0.03% மதிப்பீட்டை விட குறைவு |
| 2 | திரு.P. ஜெயகுமார் | 0.01% மதிப்பீட்டை விட அதிகம் |

மேற்கண்டவாறு வரப்பெறப்பட்ட இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளின் ஒப்புநோக்கு பட்டியல் தயாரிக்கப்பட்டதில் குறைந்த ஒப்பந்தப்புள்ளியாக மதிப்பீட்டை விட 0.03% மதிப்பீட்டை விட குறைவாக கொடுத்துள்ள ஒப்பந்ததாரர் திரு.பி. ஜெயசிங் அவர்களின் ஒப்பந்தப்புள்ளியினை ஏற்றிட மன்றத்தின் அனுமதிக்கு.

அ.கு.:- மன்றம் அனுமதிக்கலாம்.
**ந.க.எண்.**1753/2024/இ1.

மன்றத்தீர்மான எண்.1028 அனுமதிக்கப்பட்டது.

<u>பொருள் எண்.11</u>

குழித்துறை நகராட்சி வார்டு எண்.2-ல் ராஜீவ்நகர் முதல் மேலகுழிவிளாகம் (Unicode 149002L002) செல்லும் சாலையின் ஒருபுறம் தடுப்புசுவர் கட்ட ரூ.1.60 இலட்சம் மதிப்பீட்டில் மன்றத் தீர்மான எண்.975, நாள் 28-08-2024-ன்படி மன்ற ஒப்புதல் பெறப்பட்டு 27-09-2024 அன்று ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டத்தின் விவரம் கீழ்வருமாறு.

| வ. எண். | பெயர் | விழுக்காடு |
|---|---|---|
| 1 | திரு.P. ஜெயசிங் | 0.03% மதிப்பீட்டை விட குறைவு |
| 2 | திரு.P. ஜெயகுமார் | 3.17% மதிப்பீட்டை விட அதிகம் |

மேற்கண்டவாறு வரப்பெறப்பட்ட இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளின் ஒப்புநோக்கு பட்டியல் தயாரிக்கப்பட்டதில் குறைந்த ஒப்பந்தப்புள்ளியாக மதிப்பீட்டை விட 0.03% குறைவாக கொடுத்துள்ள ஒப்பந்ததாரர் திரு.பி. ஜெயசிங் அவர்களின் ஒப்பந்தப்புள்ளியினை ஏற்பது குறித்து மன்றத்தின் அனுமதிக்கு.

அ.கு.:- மன்றம் அனுமதிக்கலாம்.
**ந.க.எண்.**1750/2024/இ1.

மன்றத்தீர்மான எண்.1029 அனுமதிக்கப்பட்டது.

<u>பொருள் எண்.12</u>

குழித்துறை நகராட்சிக்கு சொந்தமான பழைய திறந்தவெளி எரியூட்டும் தகன கட்டிடம் இடித்து அப்புறப்படுத்த ரூ.2.10 இலட்சம் மதிப்பீட்டில் மன்றத் தீர்மான எண்.962, நாள் 29-08-2024-ன்படி மன்ற ஒப்புதல் பெறப்பட்டு 27-09-2024 அன்று ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டத்தின் விவரம் கீழ்வருமாறு.

| வ. எண். | பெயர் | விழுக்காடு |
|---|---|---|
| 1 | திரு. ஜஸ்டின்குமார் | 0.04% மதிப்பீட்டை விட அதிகம் |
| 2 | M/S. ராஜ் கண்ஸ்ட்ரக்ஸன்ஸ் | 0.22% மதிப்பீட்டை விட குறைவு |

மேற்கண்டவாறு வரப்பெறப்பட்ட இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளின் ஒப்புநோக்கு பட்டியல் தயாரிக்கப்பட்டதில் குறைந்த ஒப்பந்தப்புள்ளியாக மதிப்பீட்டை விட 0.22% குறைவாக கொடுத்துள்ள ஒப்பந்ததாரர் M/S. ராஜ் கண்ஸ்ட்ரக்ஸன்ஸ் அவர்களின் ஒப்பந்தப்புள்ளியினை ஏற்பது குறித்து மன்றத்தின் அனுமதிக்கு.

அ.கு.:- மன்றம் அனுமதிக்கலாம்.
ந.க.எண்.1693/2024/இ1.

மன்றத்தீர்மான எண்.1030 அனுமதிக்கப்பட்டது.

பொருள் எண்.13

குழித்துறை நகராட்சியில் NUHM 2022-2023 திட்டத்தின்கீழ் நகர்புற ஆரம்ப சுகாதார நிலையம் கட்டும் பணி நடைபெற்று வருகிறது. தற்போது கூடுதல் பணி மேற்கொள்ள ரூ.9.70 இலட்சம் மதிப்பீட்டில் மன்றத் தீர்மான எண்.972, நாள் 29-08-2024-ன்படி மன்ற ஒப்புதல் பெறப்பட்டு 27-09-2024 அன்று ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டத்தின் விவரம் கீழ்வருமாறு.

| வ. எண். | பெயர் | விழுக்காடு |
|---|---|---|
| 1 | திரு. ஜஸ்டின்குமார் | 0.44% மதிப்பீட்டை விட அதிகம் |
| 2 | M/S. ராஜ் கண்ஸ்ட்ரக்ஸன்ஸ் | 0.08% மதிப்பீட்டை விட குறைவு |

மேற்கண்டவாறு வரப்பெறப்பட்ட இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளின் ஒப்புநோக்கு பட்டியல் தயாரிக்கப்பட்டதில் குறைந்த ஒப்பந்தப்புள்ளியாக மதிப்பீட்டை விட 0.08% குறைவாக கொடுத்துள்ள ஒப்பந்ததாரர் M/S. ராஜ் கண்ஸ்ட்ரக்ஸன்ஸ் அவர்களின் ஒப்பந்தப்புள்ளியினை ஏற்பது குறித்து மன்றத்தின் அனுமதிக்கு.

அ.கு.:- மன்றம் அனுமதிக்கலாம்.
ந.க.எண்.1753/2024/இ1.

மன்றத்தீர்மான எண்.1031 அனுமதிக்கப்பட்டது.

பொருள் எண்.14

குழித்துறை நகராட்சி அலுவலகத்தில் பயன்படுத்தப்படும் 15KVA 3 KVA Generator with Automatic Maintenance வருடாந்திர பராமரிப்பு பணி மேற்கொள்ள ரூ.1.40 இலட்சம் மதிப்பீட்டிற்கு மன்றத் தீர்மான எண்.969, நாள் 29-08-2024-ன்படி மன்ற ஒப்புதல் பெறப்பட்டு 27-09-2024 அன்று ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டத்தின் விவரம் கீழ்வருமாறு.

| வ. எண். | பெயர் | விழுக்காடு |
|---|---|---|
| 1 | M/S. அன்னை ஜெனரேட்டர்ஸ் | 6.94% மதிப்பீட்டை விட அதிகம் |
| 2 | திரு.R.J. பவர் | 0.78% மதிப்பீட்டை விட குறைவு |

மேற்கண்டவாறு வரப்பெறப்பட்ட இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளின் ஒப்புநோக்கு பட்டியல் தயாரிக்கப்பட்டதில் குறைந்த ஒப்பந்தப்புள்ளியாக மதிப்பீட்டை விட 0.78% குறைவாக கொடுத்துள்ள ஒப்பந்ததாரர் திரு.R.J. பவர் அவர்களின் ஒப்பந்தப்புள்ளியினை ஏற்பது குறித்து மன்றத்தின் அனுமதிக்கு.

அ.கு.:- மன்றம் அனுமதிக்கலாம்.
ந.க.எண்.1740/2024/இ1.

மன்றத்தீர்மான எண்.1032 அனுமதிக்கப்பட்டது.

<u>பொருள் எண்.15</u>

குழித்துறை நகராட்சி பொது சுகாதார பணிகளுக்கு தேவையான கிருமிநாசினி பொருட்கள் வாங்கி நகர்மன்றத் தீர்மான எண்.893, நாள் 13-06-2024-ன்படி மன்றம் தீர்மானிக்கப்பட்டதின்பேரில் தேவையான பொருட்களை வாங்கி வழங்கிட 11-09-2024-ல் ஒப்பந்தப்புள்ளிகள் கோரப்பட்டதில் கீழ்கண்டவாறு இரண்டு ஒப்பந்தப்புள்ளிகள் பெறப்பட்டது.

1) நலம் எண்டர் பிரைசஸ்

| | | | |
|---|---|---|---|
| 1) | Abate | - 1 litre | - 625.00 |
| 2) | Pyruthrum | - 1 litre | - 1100.00 |
| 3) | Bacillus Thurigenis | - 1 Kg | - 1047.00 |
| 4) | Fly control Liquid | - 1 litre | - 1600.00 |
| 5) | Fly control Groruls | - 1 Kg | - 1947.00 |
| 6) | Lemon Grass Oil | - 1 litre | - 1649.50 |
| 7) | Black Phenyl | - 1 litre | - 65.00 |
| 8) | Toilet cleaning Arid | - 1 litre | - 50.00 |
| | | | 8083.50 |

2) SBP எண்டர் பிரைசஸ்

| | | | |
|---|---|---|---|
| 1) | Abate | - 1 litre | - 628.00 |
| 2) | Pyruthrum | - 1 litre | - 1150.00 |
| 3) | Bacillus Thurigenis | - 1 Kg | - 1055.00 |
| 4) | Fly control Liquid | - 1 litre | - 1650.00 |
| 5) | Fly control Groruls | - 1 Kg | - 1950.00 |
| 6) | Lemon Grass Oil | - 1 litre | - 1680.50 |

7) Black Phenyl - 1 litre - 70.00

8) Toilet cleaning Arid - 1 litre - 65.00

------------------

8248.50

-----------------

பெறப்ட்ட இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளில் வரிசை எண்.1-ல் கண்ட நலம் எண்டர் பிரைசஸ் என்ற நிறுவனத்தின் ஒப்பந்தப்புள்ளி குறைவாக உள்ளது. எனவே குறைந்த ஒப்பந்தப்புள்ளியினை ஏற்க மன்றத்தின் அனுமதிக்கு.

அ.கு.- மன்றத்தின் பார்வைக்கும் முடிவிற்கும்.
ந.க.எண்.3655/2021/எச்1

மன்றத்தீர்மான எண்.1033 நிராகரிக்கப்பட்டது

பொருள் எண்.16

குழித்துறை நகராட்சிக்கு சொந்தமான கருங்கல் சாலையில் அமைந்துள்ள பேருந்து நிலையத்தில் பொதுமக்கள் நலன் மற்றும் பாதுகாப்பு கருதி ஒலிபெருக்கி மூலம் விழிப்புணர்வு ஏற்படுத்தும் பணிக்கு ரூ.83000/- மதிப்பீட்டில் மன்றத் தீர்மான எண்.976, நாள் 29-08-2024-ன்படி மன்ற ஒப்புதல் பெறப்பட்டு 08-10-2024 அன்று ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டத்தின் விவரம் கீழ்வருமாறு.

| வ. எண். | பெயர் | விழுக்காடு |
|---|---|---|
| 1 | திரு. ராம்பிரசாத் | மதிப்பீட்டு விலை விகிதம் |
| 2 | திரு. ஜெயசிங் | 5.42% மதிப்பீட்டை விட அதிகம் |

மேற்கண்டவாறு வரப்பெறப்பட்ட இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளின் ஒப்புநோக்கு பட்டியல் தயாரிக்கப்பட்டதில் குறைந்த ஒப்பந்தப்புள்ளியாக மதிப்பீட்டு விலைவிகிதத்தில் கொடுத்துள்ள ஒப்பந்ததாரர் திரு. ராம்பிரசாத் அவர்களின் ஒப்பந்தப்புள்ளியினை ஏற்பது குறித்து மன்றத்தின் அனுமதிக்கு.

அ.கு.:- மன்றம் அனுமதிக்கலாம்.
ந.க.எண்.1771/2024/இ1.

மன்றத்தீர்மான எண்.1034 அனுமதிக்கப்பட்டது.

பொருள் எண்.17

குழித்துறை நகராட்சி வார்டு எண்.10 தெற்றிவிளை பகுதியில் உள் குடியிருப்புகளுக்கு குடிநீர் அவசியம் கருதி தண்ணீர் தொட்டி மற்றும் தண்ணீர் தொட்டி மேடை அமைக்கும் பணிக்கு ரூ.1.00 இலட்சம் மதிப்பீட்டில் மன்றத் தீர்மான எண்.1006, நாள் 19-09-2024-ன்படி மன்ற ஒப்புதல் பெறப்பட்டு 08-10-2024 அன்று ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டத்தின் விவரம் கீழ்வருமாறு.

| வ. எண். | பெயர் | விழுக்காடு |
|---|---|---|
| 1 | திரு.பி. ஜெயபிரகாஷ் | .0.05% மதிப்பீட்டை விட அதிகம் |
| 2 | திரு. ஜெயசிங் | மதிப்பீட்டு விலை விகிதம் |

வரப்பெறப்பட்ட இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளின் ஒப்புநோக்கு பட்டியல் தயாரிக்கப்பட்டதில் குறைந்த ஒப்பந்தப்புள்ளியாக மதிப்பீட்டு விலைவிகிதத்தில் கொடுத்துள்ள ஒப்பந்ததாரர் திரு. ஜெயசிங் அவர்களின் ஒப்பந்தப்புள்ளியினை ஏற்பது குறித்து மன்றத்தின் அனுமதிக்கு.

அ.கு.:- மன்றம் அனுமதிக்கலாம்.
ந.க.எண்.1881/2024/இ1.

மன்றத்தீர்மான எண்.1035 அனுமதிக்கப்பட்டது.

<u>பொருள் எண்.18</u>

குழித்துறை நகராட்சி பொது சுகாதார பிரிவு திடக்கழிவு மேலாண்மை பணிகள் 21 வார்டுகளிலிருந்து பெறப்படும் பிளாஸ்டிக் கழிவுகளை RCC Centre Bailing செய்யப்பட்டு வருகிறது. தற்பொழுது பிளாஸ்டிக் கழிவுகள் அதிகமாக இருப்பதால் கூடுதலாக Bailing Machine வாங்கி பொருத்தும் பணிக்கு ரூ.6.50 இலட்சம் மதிப்பீட்டில் மன்றத் தீர்மான எண்.1009, நாள் 19-09-2024-ன்படி மன்ற ஒப்புதல் பெறப்பட்டு 08-10-2024 அன்று ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டத்தின் விவரம் கீழ்வருமாறு.

| வ. எண். | பெயர் | விழுக்காடு |
|---|---|---|
| 1 | திரு.பி. ஜெயபிரகாஷ் | .0.08% மதிப்பீட்டை விட குறைவு |
| 2 | திரு.சி. சுரேஷ் | 16.74% மதிப்பீட்டை விட அதிகம் |

மேற்கண்டவாறு வரப்பெறப்பட்ட இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளின் ஒப்புநோக்கு பட்டியல் தயாரிக்கப்பட்டதில் குறைந்த ஒப்பந்தப்புள்ளியாக மதிப்பீட்டை விட 0.08% குறைவாக கொடுத்துள்ள ஒப்பந்ததாரர் திரு.பி. ஜெயபிரகாஷ் என்பவரின் ஒப்பந்தப்புள்ளியினை ஏற்பது குறித்து மன்றத்தின் அனுமதிக்கு.

அ.கு.:- மன்றம் அனுமதிக்கலாம்.
ந.க.எண்.1897/2024/இ1.

மன்றத்தீர்மான எண்.1036 அனுமதிக்கப்பட்டது.

<u>பொருள் எண்.19</u>

குழித்துறை நகராட்சி வார்டு எண்.16-ல் கீழ்பம்மம் உரக்கிடங்கில் கசடு கழிவுநீர் சுத்திகரிப்பு நிலையம் இயக்க வேண்டி ஒரு ஆண்டிற்கு Technical Assistant Grade II 1 No., Electrician Grade II - 1 No. மற்றும் Mazdoor Grade II - 3 Nos.

ஆகிய பணியாளர்கள் மூலம் ஒப்பந்தம் அடிப்படையில் பணி மேற்கொள்ள ரூ.20.00 இலட்சம் மதிப்பீட்டில் மன்றத் தீர்மான எண்.959, நாள் 29-08-2024-ன்படி மன்ற ஒப்புதல் பெறப்பட்டு 08-10-2024 அன்று ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டத்தின் விவரம் கீழ்வருமாறு.

| வ. எண். | பெயர் | விழுக்காடு |
|---|---|---|
| 1 | திரு. ஜஸ்டின் குமார் | .0.04% மதிப்பீட்டை விட குறைவு |
| 2 | திரு.பிரேம் குமார் | 0.94% மதிப்பீட்டை விட அதிகம் |

மேற்கண்டவாறு வரப்பெறப்பட்ட இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளின் ஒப்புநோக்கு பட்டியல் தயாரிக்கப்பட்டதில் குறைந்த ஒப்பந்தப்புள்ளியாக மதிப்பீட்டை விட 0.04% குறைவாக கொடுத்துள்ள ஒப்பந்ததாரர் திரு. ஜஸ்டின் குமார் என்பவரின் ஒப்பந்தப்புள்ளியினை ஏற்பது குறித்து மன்றத்தின் அனுமதிக்கு.

அ.கு.:- மன்றம் அனுமதிக்கலாம்.
ந.க.எண்.1694/2024/இ1.

மன்றத்தீர்மான எண்.1037 அனுமதிக்கப்பட்டது.

<u>பொருள் எண்.20</u>

குழித்துறை நகராட்சி வார்டு எண்.6 பட்டக சாலை (Unicode 149006S014)-ல் உள்ள மழைநீர் வடிகால் ரூ.1.10 இலட்சம் மதிப்பீட்டில் மன்றத் தீர்மான எண்.1000, நாள் 19-09-2024-ன்படி மன்ற ஒப்புதல் பெறப்பட்டு 08-10-2024 அன்று ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டத்தின் விவரம் கீழ்வருமாறு.

| வ. எண். | பெயர் | விழுக்காடு |
|---|---|---|
| 1 | திரு.சி. ராஜன் | .0.07% மதிப்பீட்டை விட குறைவு |
| 2 | திருமதி.பி. சரோஜா | 0.52% மதிப்பீட்டை விட அதிகம் |

மேற்கண்டவாறு வரப்பெறப்பட்ட இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளின் ஒப்புநோக்கு பட்டியல் தயாரிக்கப்பட்டதில் குறைந்த ஒப்பந்தப்புள்ளியாக மதிப்பீட்டை விட 0.07% குறைவாக கொடுத்துள்ள ஒப்பந்ததாரர் திரு.சி. ராஜன் என்பவரின் ஒப்பந்தப்புள்ளியினை ஏற்பது குறித்து மன்றத்தின் அனுமதிக்கு.

அ.கு.:- மன்றம் அனுமதிக்கலாம்.
ந.க.எண்.1875/2024/இ1.

மன்றத்தீர்மான எண்.1038 அனுமதிக்கப்பட்டது.

<u>பொருள் எண்.21</u>

குழித்துறை நகராட்சி வார்டு எண்.17-ல் குருசடி பின்புற சாலையில் (Unicode 149017R086) உள்ள மழைநீர் வடிகால் ரூ.0.50 இலட்சம் மதிப்பீட்டில்

மன்றத் தீர்மான எண்.1007, நாள் 19-09-2024-ன்படி மன்ற ஒப்புதல் பெறப்பட்டு 08-10-2024 அன்று ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டத்தின் விவரம் கீழ்வருமாறு.

| வ. எண். | பெயர் | விழுக்காடு |
|---|---|---|
| 1 | திருமதி.பி. சரோஜா | .0.13% மதிப்பீட்டை விட குறைவு |
| 2 | திரு.எ. ஆன்றனி | 0.23% மதிப்பீட்டை விட அதிகம் |

மேற்கண்டவாறு வரப்பெறப்பட்ட இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளின் ஒப்புநோக்கு பட்டியல் தயாரிக்கப்பட்டதில் குறைந்த ஒப்பந்தப்புள்ளியாக மதிப்பீட்டை விட 0.13% குறைவாக கொடுத்துள்ள ஒப்பந்ததாரர் திருமதி.பி. சரோஜா என்பவரின் ஒப்பந்தப்புள்ளியினை ஏற்பது குறித்து மன்றத்தின் அனுமதிக்கு.

அ.கு.:- மன்றம் அனுமதிக்கலாம்.
ந.க.எண்.1895/2024/இ1.

மன்றத்தீர்மான எண்.1039 அனுமதிக்கப்பட்டது.

<u>பொருள் எண்.22</u>

குழித்துறை நகராட்சிக்குட்பட்ட வார்டு எண்.8-ல் மேட்டுகிராமம் அம்மன்கோவில் வீதியில் (Unicode 149006S015) உள்ள மழைநீர் வடிகால் ரூ.0.80 இலட்சம் மதிப்பீட்டில் மன்றத் தீர்மான எண்.1004, நாள் 19-09-2024-ன்படி மன்ற ஒப்புதல் பெறப்பட்டு 08-10-2024 அன்று ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டத்தின் விவரம் கீழ்வருமாறு.

| வ. எண். | பெயர் | விழுக்காடு |
|---|---|---|
| 1 | திரு.சி. ராஜன் | .0.05% மதிப்பீட்டை விட குறைவு |
| 2 | திரு.வி.எஸ். ஸ்ரீகுமார் | 8.72% மதிப்பீட்டை விட அதிகம் |

மேற்கண்டவாறு வரப்பெறப்பட்ட இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளின் ஒப்புநோக்கு பட்டியல் தயாரிக்கப்பட்டதில் குறைந்த ஒப்பந்தப்புள்ளியாக மதிப்பீட்டை விட 0.05% குறைவாக கொடுத்துள்ள ஒப்பந்ததாரர் திரு.சி. ராஜன் என்பவரின் ஒப்பந்தப்புள்ளியினை ஏற்பது குறித்து மன்றத்தின் அனுமதிக்கு.

அ.கு.:- மன்றம் அனுமதிக்கலாம்.
ந.க.எண்.1879/2024/இ1.

மன்றத்தீர்மான எண்.1040 அனுமதிக்கப்பட்டது.

<u>பொருள் எண்.23</u>

குழித்துறை நகராட்சி வார்டு எண்.20-ல் Auto Stand to R.C. Street (Unicode No.149017R012) and R.C.Street Sango Medical Road (Unicode No.149017R098) ஆகிய சாலைகளில் மழைநீர் வடிகால் ரூ.0.50 இலட்சம் மதிப்பீட்டில் மன்றத் தீர்மான

எண்.1008, நாள் 19-09-2024-ன்படி மன்ற ஒப்புதல் பெறப்பட்டு 08-10-2024 அன்று ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டத்தின் விவரம் கீழ்வருமாறு.

| வ. எண். | பெயர் | விழுக்காடு |
|---|---|---|
| 1 | திரு.ஜி. சுரேஷ் | .12.38% மதிப்பீட்டை விட அதிகம் |
| 2 | திரு.எம். சஜி | மதிப்பீட்டு விலை விகிதம் |

மேற்கண்டவாறு வரப்பெறப்பட்ட இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளின் ஒப்புநோக்கு பட்டியல் தயாரிக்கப்பட்டதில் குறைந்த ஒப்பந்தப்புள்ளியாக மதிப்பீட்டு விலை விகிதத்தில் ஒப்பந்ததாரர் திரு.எம். சஜி அவர்கள் குறைவாக கொடுத்துள்ள ஒப்பந்தப்புள்ளியினை ஏற்பது குறித்து மன்றத்தின் அனுமதிக்கு.

அ.கு.:- மன்றம் அனுமதிக்கலாம்.
ந.க.எண்.1896/2024/இ1.

மன்றத்தீர்மான எண்.1041 அனுமதிக்கப்பட்டது.

<u>பொருள் எண்.24</u>

குழித்துறை நகராட்சி வார்டு எண்.16-ல் Compost Yard Sub Road (Unicode No.149016R082) சாலையின் வடக்கு பக்கத்தில் உள்ள மழைநீர் வடிகால் ரூ.1.90 இலட்சத்தில் மன்றத் தீர்மான எண்.1005, நாள் 19-09-2024-ன்படி மன்ற ஒப்புதல் பெறப்பட்டு 08-10-2024 அன்று ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டத்தின் விவரம் கீழ்வருமாறு.

| வ. எண். | பெயர் | விழுக்காடு |
|---|---|---|
| 1 | திரு.வி.எஸ். ஸ்ரீகுமார் | .15.87% மதிப்பீட்டை விட குறைவு |
| 2 | திரு.பி. ஜெயசந்திரன் | 25.00% மதிப்பீட்டை விட குறைவு |

மேற்கண்டவாறு வரப்பெறப்பட்ட இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளின் ஒப்புநோக்கு பட்டியல் தயாரிக்கப்பட்டதில் மதிப்பீட்டை விட திரு.பி. ஜெயசந்திரன் என்பவர் 25.00% குறைவாக கொடுத்துள்ளார். எனவே மதிப்பீட்டை விட 10% மேல் கொடுத்துள்ளதால், இந்த ஒப்பந்தப்புள்ளி நிராகரித்து மறு ஒப்பந்தப்புள்ளி கோர மன்றத்தின் அனுமதிக்கு.

அ.கு.:- மறு ஒப்பந்தப்புள்ளி கோர மன்றம் அனுமதிக்கலாம்.
ந.க.எண்.1880/2024/இ1.

மன்றத்தீர்மான எண்.1042 மறுஒப்பந்தப்புள்ளி கோருவதற்கு அனுமதிக்கப்பட்டது.

<u>பொருள் எண்.25</u>

குழித்துறை நகராட்சி வார்டு எண்.5-ல் ஆர்.சி. தெருவில் அமைந்துள்ள நூலகம் பராமரிப்பு செய்யும் பணிக்கு ரூ.3.60 இலட்சம் மதிப்பீட்டில் மன்றத் தீர்மான எண்.999, நாள் 19-09-2024-ன்படி மன்ற ஒப்புதல் பெறப்பட்டு 08-10-2024 அன்று ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டத்தின் விவரம் கீழ்வருமாறு.

| வ. எண். | பெயர் | விழுக்காடு |
|---|---|---|
| 1 | திரு.சி. சுரேஷ் | .12.96% மதிப்பீட்டை விட குறைவு |
| 2 | திருமதி.பி. சரோஜா | 50.34% மதிப்பீட்டை விட குறைவு |

மேற்கண்டவாறு வரப்பெறப்பட்ட இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளின் ஒப்புநோக்கு பட்டியல் தயாரிக்கப்பட்டதில் மதிப்பீட்டை விட திருமதி.பி. சரோஜா என்பவர் 50.34% குறைவாக கொடுத்துள்ளார். எனவே மதிப்பீட்டை விட 10% மேல் கொடுத்துள்ளதால், இந்த ஒப்பந்தப்புள்ளி நிராகரித்து மறு ஒப்பந்தப்புள்ளி கோர மன்றத்தின் அனுமதிக்கு.

அ.கு.:- மறு ஒப்பந்தப்புள்ளி கோர மன்றம் அனுமதிக்கலாம்.
ந.க.எண்.1874/2024/இ1.

மன்றத்தீர்மான எண்.1043 மறுஒப்பந்தப்புள்ளி கோருவதற்கு அனுமதிக்கப்பட்டது.

<u>பொருள் எண்.26</u>

குழித்துறை நகராட்சி கருங்கல் சாலையில் KNMT திட்டத்தின்கீழ் புதியதாக நவீன சந்தை அமைக்கும் பணி நடைபெற்று வருவதால் நடைபாதை வியாபாரிகளுக்கு காலியான இடத்தில் கடைக்காக இடம் ஒதுக்கீடு செய்யப்பட்டு குத்தகைக்கு விடப்பட்டுள்ளது. மேலும் தற்சமயம் வியாபாரிகள் சாலை ஒரங்களில் அமர்ந்து வியாபாரம் செய்வதால் போக்குவரத்து நெருக்கடி மற்றும் பொதுமக்களுக்கு இடையூறாகவும் உள்ளது. எனவே வியாபாரிகளுக்கு கூடுதலாக இடம் ஒதுக்கீடு செய்ய அருகில் உள்ள 400 சதுரமீட்டர் இடம் கொண்ட M.C.C. கட்டிடத்தினை வியாபாரிகள் மற்றும் பொதுமக்களின் நலனை கருத்தில் கொண்டு மாத தவணையில் தற்காலிகமாக குத்தகைக்கு விடுவதற்கு மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

அ.கு.:- மன்றம் முடிவு செய்யலாம்.
ந.க.எண்.2170/2024/அ2

மன்றத்தீர்மான எண்.1044 அனுமதிக்கப்பட்டது.

<u>பொருள் எண்.27</u>

குழித்துறை நகராட்சி பகுதியில் உள்ள கட்டிடங்களுக்கு சொத்துவரி செலுத்துவது தொடர்பாக தமிழ்நாடு நகர்ப்புற உள்ளாட்சி அமைப்புகள் விதிகள் 2023-ன்படி அறிவிப்பு நோட்டீஸ்கள் 5000 எண்ணம் அச்சிடப்பட்டு வினியோகம் செய்யப்பட்ட வகைக்கு பட்டியல் தொகை ரூ.8750/- Dharshini Global Hub நிறுவன உரிமையாளர் திரு.கே. சசி என்பவரிடம் இருந்து வரப்பெற்றுள்ளது. மேற்படி தொகையினை அன்னாருக்கு நகராட்சி பொது நிதியிலிருந்து வழங்கிட மன்றத்தின் அனுமதிக்கு.

அ.கு. - மன்றம் அனுமதி வழங்கலாம்.
**ந.க.எண்.**869/2022/**அ**1.

மன்றத்தீர்மான எண்.1045 அனுமதிக்கப்பட்டது.

<u>பொருள் எண்.28</u>

குழித்துறை நகராட்சிக்கு சொந்தமான ஈப்பு வாகனம் TN.75 AZ 2768-க்கு சர்வீஸ் மற்றும் ஆயில் மாற்றுவதற்கும் மேலும் சில பழுதுகள் சரி செய்வதற்கு என Derik Motors Private (Ltd.) Nagercoil மூலம் ரூ.7174/-க்கு விலைப்புள்ளி வழங்கப்பட்டுள்ளது. மேற்படி வாகனத்திற்கான பழுதுகள் நீக்கம் செய்யவும் அதற்கான செலவினத்தை நகராட்சி வருவாய் நிதியில் செலவிடவும், மேலும் அரசு அங்கீகாரம் பெற்ற டெரிக் நிறுவனத்தின் பணியினை மேற்கொள்ளவும் மன்றத்தின் அனுமதிக்கு.

அ.கு.:- பணியின் அவசர அவசியம் கருதி நகர்மன்ற தலைவர் அவர்களின் முன் அனுமதி பெற்று பணி உத்தரவு வழங்கியதை மன்றம் அனுமதிக்கலாம்.
**ந.க.எண்.**1247/2022/**இ**1.

மன்றத்தீர்மான எண்.1046 அனுமதிக்கப்பட்டது.

<u>பொருள் எண்.29</u>

மாவட்ட ஆட்சியர் மற்றும் மாவட்ட ஊரக வளர்ச்சி முகமை நாகர்கோவில் அவர்களின் செயல்முறை எண்.அ6/1869/2024, நாள் 07-09-2024-ன்படி குழித்துறை நகராட்சிக்குட்பட்ட பகுதியில் உள்ள தொடக்கப்பள்ளி மற்றும் நடுநிலைப்பள்ளி கட்டிடங்கள் நகராட்சி வசம் ஒப்படைப்பு செய்வதாக தெரிவிக்கப்பட்டுள்ளது. அதனடிப்படையில் ஒப்படைப்பு செய்யப்பட்டுள்ள கீழ்கண்ட பள்ளிகளின் விவரப்பட்டியல் மன்றத்தின் பார்வைக்கும் பதிவிற்கும் சமர்ப்பிக்கப்படுகிறது.

1) அரசு ஆண்கள் தொடக்கப்பள்ளி, மார்த்தாண்டம்.
2) அரசு எல்.எம்.தொடக்கப்பள்ளி, மார்த்தாண்டம்.
3) அரசு மாதவிலாசம் நடுநிலைப்பள்ளி, மார்த்தாண்டம்.
4) அரசு பெண்கள் நடுநிலைப்பள்ளி, குழித்துறை.
5) அரசு கிராம தொடக்கப்பள்ளி, குழித்துறை.
6) அரசு ஆரம்ப பள்ளி, விளவங்கோடு.

அ.கு.:- மன்றம் பார்வையிட்டு பதிவு செய்யலாம்.
**ந.க.எண்.**2145/2024/**இ**1.

மன்றத்தீர்மான எண்.1047 அனுமதிக்கப்பட்டது.

<u>பொருள் எண்.30</u>

குழித்துறை நகராட்சி தலைமை நீரேற்று நிலையம் சுத்திகரிப்பு நிலையத்தில் குடிநீர் சுத்திகரிப்பு செய்ய ஆலம் தற்பொழுது இருப்பில் குறைவாக உள்ளதால் கூடுதலாக 2500kg ஆலம் வினியோகம் செய்ய உத்தேச மதிப்பீடு ரூ.75,000/- தயாரிக்கப்பட்டுள்ளது. தயார் செய்யப்பட்ட மதிப்பீட்டிற்கு மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

அ.கு.:- மன்றம் அனுமதிக்கலாம்.
ந.க.எண்.2146/2024/இ1.

மன்றத்தீர்மான எண்.1048 அனுமதிக்கப்பட்டது

<u>பொருள் எண்.31</u>

குழித்துறை நகராட்சிக்கு சொந்தமான கருங்கல் சாலையில் அமைந்துள்ள பொதுகழிப்பிடத்தில் ஆண்களுக்கு 5 கழிவறை மற்றும் பெண்களுக்கு 5 கழிவறைகள் உள்ளது. தற்பொழுது பயணிகள் மற்றும் போக்குவரத்து பணியாளர்கள் அதிகமாக உள்ளதால் சரியான நேரத்தில் கழிப்பிடம் பயன்படுத்த முடியாமல் சிரமப்படுகிறார்கள். எனவே பொதுமக்கள் நலன் கருதி பொதுகழிப்பிடம் அருகில் கூடுதலாக இரண்டு கழிவறை அமைக்க உத்தேச மதிப்பீடு ரூ.5,00,000/- (ரூபாய் ஐந்து இலட்சம் மட்டும்) தயாரிக்கப்பட்டுள்ளது. தயார் செய்யப்பட்ட மதிப்பீட்டிற்கு மன்றத்தின் அனுமதிக்கு.

அ.கு.:- மன்றம் அனுமதிக்கலாம்.
ந.க.எண்.2124/2024/இ1.

மன்றத்தீர்மான எண்.1049 அனுமதிக்கப்பட்டது.

<u>பொருள் எண்.32</u>

குழித்துறை நகராட்சி வெட்டுமணி சிறுவர் பூங்காவில் சுற்றுசுவர் பழுது பொதுமக்களுக்கு பாதுகாப்பின்றி மற்றும் இடையூறாக உள்ளது. எனவே மேற்படி பூங்காவில் சுற்றுசுவர் அமைக்கவும் பராமரிப்பு பணி மேற்கொள்ளவும் உத்தேச மதிப்பீடு ரூ.3,20,000/- (ரூபாய் மூன்று இலட்சத்து இருபதாயிரம் மட்டும்) தயாரிக்கப்பட்டுள்ளது. தயார் செய்யப்பட்ட மதிப்பீட்டிற்கு மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

அ.கு.:- மன்றம் அனுமதிக்கலாம்.
ந.க.எண்.2123/2024/இ1.

மன்றத்தீர்மான எண்.1050 அனுமதிக்கப்பட்டது.

<u>பொருள் எண்.33</u>

குழித்துறை நகராட்சி வார்டு எண்.3 படப்பறை குளம் அருகில் தேவர்குளம் சாலையில் தடுப்புசுவர் இடிந்து பொதுமக்களுக்கும் போக்குவரத்திற்கும் இடையூறாக உள்ளது. எனவே பொதுமக்கள் நலன் கருதி மேற்கண்ட இடத்தில் தடுப்புசுவர் அமைக்க உத்தேச மதிப்பீடு ரூ.1.20 இலட்சம் தயாரிக்கப்பட்டுள்ளது. தயார் செய்யப்பட்ட மதிப்பீட்டிற்கு மன்றத்தின் அனுமதிக்கு.

அ.கு.:- மன்றம் அனுமதிக்கலாம்.
ந.க.எண்.2147/2024/இ1.

மன்றத்தீர்மான எண்.1051 அனுமதிக்கப்பட்டது.

<u>பொருள் எண்.34</u>

குழித்துறை நகராட்சி மார்த்தாண்டம் சந்தை சாலையில் இயங்கி வரும் RRC-யில் தினசரி பெறப்படும் பிளாஸ்டிக் கழிவுகளை தரம்பிரித்து சேகரித்து செட்டிநாடு சிமெண்ட் ஆலை கரூர் அனுப்பி வைக்கப்படுகிறது. தற்பொழுது மேற்படி RRC சென்டரில் தேக்க நிலையில் பிளாஸ்டிக் கழிவுகள் அதிகமாக இருப்பதாலும், குடியிருப்பு பகுதிகள் அதிகமாக இருப்பதாலும் சுற்றுசூழல் பெரும் பாதிப்பாக உள்ளதாகவும் மேற்கண்ட பிளாஸ்டிக் கழிவுகளை உரிய வழி மூலம் அப்புறப்படுத்த பொது சுகாதார பிரிவின் மூலம் அறிக்கை சமர்ப்பிக்கப்பட்டது. அதன் அடிப்படையில் மேற்கண்ட பிளாஸ்டிக் கழிவுகளை செட்டிநாடு சிமெண்ட் நிறுவனம் Karikali Plant காரைக்கால்-ற்கு கொண்டு செல்வதற்கு உத்தேச மதிப்பீடு ரூ.7,00,000/- (ரூபாய் ஏழு இலட்சம்) தயாரிக்கப்பட்டுள்ளது. தயார் செய்யப்பட்ட மதிப்பீட்டிற்கு மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

அ.கு.:- மன்றம் அனுமதிக்கலாம்.
ந.க.எண்.1723/2024/இ1.

மன்றத்தீர்மான எண்.1052 அனுமதிக்கப்பட்டது.

<u>பொருள் எண்.35</u>

குழித்துறை நகராட்சி சொத்துவரி விதிப்பில் கல்விவரி விதிக்க வழிவகை செய்யப்பட்டுள்ளது. குறித்த அறவிப்பினை தினசரி செய்தி நாளிதழான தமிழ் முரசில் 25-09-2024 அன்று பிரசுரம் செய்யப்பட்ட வகைக்கு பட்டியல் தொகை ரூ.9,744/- Kal Publication (P) Ltd., என்ற நிறுவனத்திடமிருந்து வரப்பெற்றுள்ளது. மேற்படி தொகையினை நகராட்சி பொது நிதியிலிருந்து அந்நிறுவனத்திற்கு வழங்கிட மன்றத்தின் அனுமதிக்கு.

அ.கு.:- மன்றம் அனுமதி வழங்கலாம்.
**ந.க.எண்.**706/2024/**அ**1.

மன்றத்தீர்மான எண்.1053 அனுமதிக்கப்பட்டது.

<u>பொருள் எண்.36</u>

குழித்துறை நகராட்சி வளர்ச்சி திட்டப்பணிகள் குறித்து பத்திரிக்கையில் விளம்பரம் செய்த வகைக்கு கீழ்கண்ட விவரப்படி பட்டியல் தொகை வரப்பெற்றுள்ளது.

1) மாலை மலர் - 9,912/-
2) விடுதலை - 7,500/-
3) தினத்தந்தி - 9,840/-

மேற்படி தொகையினை சம்மந்தப்பட்ட பத்திரிக்கை நிறுவனத்திற்கு நகராட்சி பொதுநிதியின் கீழ் வழங்கிட மன்றத்தின் அனுமதிக்கு.

அ.கு.:- மன்றம் அனுமதிக்கலாம்.
**ந.க.எண்.**1379/2024/**இ**1

மன்றத்தீர்மான எண்.1054 அனுமதிக்கப்பட்டது.

.<u>பொருள் எண்.37</u>

குழித்துறை நகராட்சிக்கு சொந்தமான வாகனம் TN75L0828 வாகனத்தின் பழுதுகள் மற்றும் AC டிங்கர், மெக்கானிக் வேலைகள், டிங்கர் வேலை செய்த இடத்தில் பெயிண்ட் அடித்தல் போன்ற வேலைகள் செய்ய உத்தேச மதிப்பீடு ரூ.85,000/- (ரூபாய் எண்பத்தைந்தாயிரம் மட்டும்) தயாரிக்கப்பட்டது. தயார் செய்யப்பட்ட மதிப்பீட்டிற்கு மன்றத்தின் அனுமதிக்கு.

அ.கு.:- மன்றம் அனுமதிக்கலாம்.
**ந.க.எண்.**1002/2012/**இ**1

மன்றத்தீர்மான எண்.1055 அனுமதிக்கப்பட்டது.

<u>பொருள் எண்.38</u>

குழித்துறை நகராட்சிக்கு சொந்தமான கீழ்காணும் குத்தகைதாரர்கள் கடையினை காலி செய்திட தெரிவிக்கப்பட்டதின்பேரில் கடையினை காலி செய்து தற்சமயம் வைப்புத்தொகையினை திரும்பக் கேட்டு மனு அளித்துள்ளார்கள்.

1) அலாவுதீன் - IDSMT கடை எண்.2 மற்றும் 3

2) சலாவுதீன் - IDSMT கடை எண்.7

3) எஸ். சுபின்ராஜ் - IDSMT கடை எண்.16 மற்றும் 17

4) எம். சசிகுமார் - IDSMT கடை எண்.13 மற்றும் 14

5) எஸ். ஸ்ரீஜீ - IDSMT கடை எண்.10 மற்றும் 11

6) எஸ். ஸ்ரீகுமார் - IDSMT கடை எண்.1

7) ஜார்ஜ் நெல்சன் - IDSMT கடை எண்.18, 19, 20, 21

8) கே. தாஸ் - IDSMT கடை எண்.27, 28

9) எஸ். குமாரதாஸ் - கருங்கல் சாலை கடை எண்.11

10) ராஜன் - பேருந்து நிலைய கடை எண்.7

11) சி. சிவகுமார் - பேருந்து நிலைய கடை எண்.10 மற்றும் 11

12) வி. தேவராஜன் - கருங்கல் சாலை கடை எண்.1

மேற்கண்டவாறு வரப்பெற்றுள்ள மனுக்களுக்கு செலுத்தப்பட்டிருக்கும் வைப்புத் தொகையினை கணக்கீடு செய்து வழங்கிட மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

அ.கு.:- மன்றம் முடிவு செய்யலாம்.
**ந.க.எண்.**3066/2021/அ2

மன்றத்தீர்மான எண்.1056 அனுமதிக்கப்பட்டது.

<u>பொருள் எண்.39</u>

குழித்துறை நகராட்சி- பொது சுகாதாரப்பிரிவு அலுவலகத்தில் இயங்கி வந்த குளிர்சாதனபெட்டி முழுமையாக பழுதடைந்துள்ளது. மேலும் சரி செய்ய இயலாத நிலையில் உள்ளது. எனவே புதியதாக குளிர்சாதனபெட்டி அமைக்க உத்தேச மதிப்பீடு ரூ.60,000/- தயார் செய்யப்பட்டுள்ளது. தயார் செய்யப்பட்ட மதிப்பீட்டிற்கு மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

அ.கு.:- மன்றம் முடிவு செய்யலாம்.
**ந.க.எண்.**2175/2024/இ1

மன்றத்தீர்மான எண்.1057 அனுமதிக்கப்பட்டது.

<u>பொருள் எண்.40</u>

குழித்துறை நகராட்சி வார்டு எண்.17, வடக்குத்தெருவில் பஞ்சாப் நேஷனல் வங்கி முதல் லெட்சுமி விலாஸ் பேக்கரி வரை உள்ள மழைநீர் வடிகால் பழுதடைந்து பொதுமக்களுக்கு இடையூறாக உள்ளது. எனவே பொதுமக்கள் சுகாதாரம் மற்றும் போக்குவரத்து கருதி மேற்கண்ட மழைநீர் வடிகால் சீரமைக்க உத்தேச மதிப்பீடு ரூ.9.50 இலட்சம் தயாரிக்கப்பட்டுள்ளது. தயார் செய்யப்பட்ட மதிப்பீட்டிற்கு மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

அ.கு.:- மன்றம் அனுமதிக்கலாம்.
**ந.க.எண்.**1002/2012/**இ**1

மன்றத்தீர்மான எண்.1058 அனுமதிக்கப்பட்டது.

ஒப்பம்/- திரு.பொன். ஆசைத்தம்பி,
நகர் மன்றத்தலைவர்,
குழித்துறை நகராட்சி.

/உண்மை நகல்/

ஆணையாளர்,
குழித்துறை நகராட்சி.